# முரசொலி

பக்கங்கள் நான்கு — விலை ரூபா; 5-00

முரசு 06 ஒலி 233 ஆங்கீரச ஆடி 11 ( 26.07.1992 ) ஞாயிறு


★ அலுவலகத்தை விட்டு

## முன் அனுமதியின்றிச் சென்றால் ஒழுங்கு நடவடிக்கை

எந்தவொரு உத்தியோகத்தரும் முன் அனுமதி பெறாது தமது உத்தியோகத் தலத்திலிருந்து வெளியே சென்றால் ஒழுக்காற்று நடவடிக்கைக்கு உட்படுத்தப்படுவார்கள் என்று வடகிழக்கு மாகாண ஆளுநரால் சகல திணைக்களத் தலைவர்களுக்கும் அனுப்பி வைத்துள்ள சுற்றறிக்கையில் தெரிவித்துள்ளனர். இதற்கு திணைக்களத் தலைவர்கள், பதவிநிலை உத்தியோகத்தர்களும் விதிவிலக்கல்ல என்றும் இது தொடர்பாக தாபனக் கோவை 12 ஆவது அத்தியாயத்தின் 3 ஆம் பந்தியின்படி முன் அனுமதியை விடுமுறை அனுமதிக்கும் உத்தியோகத்தரிடமிருந்து பெறவேண்டியது அவசியம் எனவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. — 04 ஆம் பக்கம் பார்க்க

# அரசுக்கு எதிராகத் தென் பகுதியில் "கறுப்பு எதிர்ப்பு" போராட்டம்

## ஆகஸ்ட் செப்டெம்பர் மாதங்களில் பேரணிகள் கூட்டங்கள் நடத்த ஏற்பாடு

ஆகஸ்ட் மாத ஆரம்பத்திலிருந்து செப்டெம்பர் மாதஇறுதிவரை "கறுப்பு எதிர்ப்பு" போராட்டம் எனக் குறிப்பிட்டு விசேட அரச எதிர்ப்பு போராட்டமொன்றை கூட்டு எதிரணிக் கட்சிகள் நடத்தத் திட்டமிட்டுள்ளன.

இத்திட்டத்தின்படி மாத்தறையில் கறுப்பு பேரணியொன்று நடத்தப்படும். சுதந்திரக்கட்சித் தலைவி சிறிமாவோ பண்டாரநாயக தலைமையில் நடைபெறும் இப்பேரணியில் ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணி மற்றும் எதிர்க்கட்சிகளின் தலைவர்கள் கலந்து கொண்டு உரையாற்றுவதற்கு ஏற்பாடு செய்யப்படும்.

ஆகஸ்ட் மாதம் 12 ஆம் திகதி முதலான ஒரு வாரம் "கறுப்பு வாரம்" எனப் பெயரிடப்பட்டு ஏழு மாகாணங்களிலும் பெரும் 'கறுப்பு பேரணிகள்' நடத்தவும் திட்டமிடப்பட்டுள்ளது.

அடுத்த ஒருமாத காலத்தை "கறுப்பு மாதம்" எனப் பெயரிட்டு கறுப்பு எதிர்ப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

செப்டெம்பர் மாத இறுதியில் நடைபெறவுள்ள "கறுப்பு எதிர்ப்பு" பேரணிகளுக்கு அழைக்கப்படுவோர் கறுப்பு பட்டிகளும் கறுப்பு ஆடைகளும் அணிய வேண்டுமெனவும் கேட்டுக்கொள்ளப்படுவர்.

"கறுப்பு எதிர்ப்பு" இயக்கம் சம்பந்தமாக அச்சிடப்படும் அறிவித்தல்கள் சுவரொட்டிகள் மற்றும் மேடைகள் யாவும் கறுப்பு நிறத்திலேயே இருக்க வேண்டுமெனவும் தீர்மானிக்கப்பட்டுள்ளதென தெரிவிக்கப்படுகிறது.

★ பலவேகய II தோல்வி

## இராணுவ உயர் மட்டத்தில் கருத்து வேற்றுமை காரணம்

வடக்கில் தொடுக்கப்பட்ட பலவேகய II இராணுவ நடவடிக்கைகள் எதிர்பார்த்த நோக்கத்தை அடையாததற்கு இராணுவ உயர்மட்டத்தில் நிலவும் கருத்து வேறுபாடே காரணம் என 'ராவய'

கூட்டுப்படைத்தலைமையக தலைவர் ஹமில்டன் வணசிங்க, பாதுகாப்பு செயலாளர் சிறில் ரணதுங்க ஆகியோர்க்கும் ஆயுதப்படைத் தளபதிகளுக்குமிடையில் பல

சென்ற வாரம் ஒப்சேவர் பத்திரிகை ஆயுதப்படைத் தளபதிகளுக்கு சாதகமாகவும் ஜெனரல் ஹமில்டன் வணசிங்கவுக்கும் ஜெனரல் சிறில் ரணதுங்கவுக்கு எதிராகவும்

## திருமலையில் குண்டு வெடிப்பு மட்டக்களப்பில் புலிகள் தாக்கு

திருகோணமலையில் இராணுவ பதுங்கு குழியொன்றில் இடம் பெற்ற குண்டு வெடிப்பில் ஒரு இராணுவ சிப்பாய் கொல்லப்பட்டதாகவும் இருவர் படுகாயமடைந்ததாகவும் ஏஜென்சி செய்திகள் தெரிவிக்கின்றன.

இதற்கிடையில் மட்டக்களப்பு பிரதேசத்தில் இராணுவ அணியொன்றின் மீது விடுதலைப் புலிகள் வழிமறித்து தாக்குதல் நடத்தியதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இத்தாக்குதலில் பல இராணுவத்தினர் காயமடைந்ததாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

## ஸ்ரான்லி வீதிக் கிளையில் திங்கள், செவ்வாய் ஓய்வூதியம்

யாழ் ஸ்ரான்லி வீதி இலங்கை வங்கிக் கிளையில் நாளை 27 ஆம் திகதி திங்கட்கிழமையும் மறுநாள் செவ்வாய்க்கிழமையும் சில ஓய்வூதியர்களுக்கு பென்சன் வழங்கப்படும் என வங்கி வட்டாரங்கள் தெரிவித்தன.

ஆனால் பென்சன் வவுச்சர்கள் முதல் நாள் வைப்பிலிடப்பட்டு அடுத்த நாளே ஓய்வூதியத்துக்கான பணம் வங்கியால் வழங்கப்படும் எனவும் அவ்வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன. 47

## மூன்று கப்பல்கள் மூலம் வடக்கே உணவுப்பொருள்

யாழ்ப்பாணத்திற்கு அனுப்பி வைப்பதற்காக தற்பொழுது கொழும்புத்துறைமுகத்தில் இரு கப்பல்களில் உணவுப் பொருள்கள் ஏற்றப்படுவதாக கொழும்புச் செய்தியொன்று தெரிவிக்கிறது.

மேலதிகப் பொருள்களை மற்றொரு கப்பலில் ஏற்றுவதற்கு நடவடிக்கையெடுக்கப் பட்டுள்ளதாகவும் அச்செய்தி தெரிவிக்கிறது.

## இம்மாத ஆசிரிய சம்பளம்

### விஞ்ஞான கண்காட்சி

யாழ்ப்பாண விஞ்ஞான சங்கமும், யாழ். பல்கலைக்கழகமும் இணைந்து நடத்தும் மாணவர்களுக்கான விஞ்ஞான கண்காட்சிக்கு 27 ஆம் 28 ஆம் திகதிகளில் க.பொ.த. (உயர்தரம்) மாணவர், ஆசிரியர் ஆகியோர் மாத்திரமே அனுமதிக்கப்படுவர். இவர்கள் புதிய நுழைவாயில் சீட்டுக்களைப் பெற்றுக் கொள்ள வேண்டும் எனக் கண்காட்சி அமைப்பாளர்கள் அறிவித்துள்ளார்கள்.

இக்கண்காட்சிக்கான விஞ்ஞான பீடம் இரண்டாம் அரையாண்டுத் தவணை ஆகஸ்ட் 3 ஆம் திகதி ஆரம்பிக்கப்படுமென பல்கலைக்கழக நிர்வாகம் அறிவித்துள்ளது.

### மண்டைதீவில்இருந்து காலையில் சூடு

மண்டைதீவு இராணுவ முகாமில் இருந்து இராணுவத்தினர் நேற்று காலை 9 மணியளவில் யாழ் கரையோர பகுதிகளை நோக்கி துப்பாக்கிப் பிரயோகத்தை மேற்கொண்டனர்.

ஹெலி ஒன்றும் பிற்பகல் 2 மணியளவில் மண்டைதீவு பகுதியை வட்டமிட்டு சென்றதாகவும் தெரிவிக்கப்படுகிறது. 47

### உதைபந்தாட்ட முடிவுகள்

ஒலிம்பிக் போட்டிக்கான உதைப்பந்தாட்ட பூர்வாங்க சுற்றுப் போட்டிகள் கடந்த வெள்ளிக்கிழமை ஆரம்பமாகின.

முதலாவது ஆட்டத்தில் இத்தாலி அமெரிக்காவை 2-1 என்ற கோல் கணக்கில் வென்

வடக்கில் தொடுக்கப்பட்ட பலவேகய II இராணுவ நடவடிக்கைகள் எதிர்பார்த்த நோக்கத்தை அடையாததற்கு இராணுவ உயர்மட்டத்தில் நிலவும் கருத்து வேறுபாடே காரணம் என 'ராவய' பத்திரிகை ஆசிரியர் விக்டர் ஐவன் கருத்துத் தெரிவித்துள்ளார்.

கூட்டுப்படைத்தலைமையக தலைவர் ஹமில்டன் வணசிங்க, பாதுகாப்பு செயலாளர் சிறில் ரணதுங்க ஆகியோர்க்கும் ஆயுதப்படைத் தளபதிகளுக்குமிடையில் பலமான கருத்து வேறுபாடுகள் நிலவியதால் இந் நடவடிக்கைகள் தோல்வியடைந்தன.

சென்ற வாரம் ஒப்சேவர் பத்திரிகை ஆயுதப்படைத் தளபதிகளுக்கு சாதகமாகவும் ஜெனரல் ஹமில்டன் வணசிங்கவுக்கும் ஜெனரல் சிறில் ரணதுங்கவுக்கும் எதிராகவும் கருத்து வெளியிட்டமையையும் திரு. விக்டர் ஐவன் சுட்டிக்காட்டியுள்ளார்.

# ஜனாதிபதி தேர்தல் வழக்கு தீர்ப்பு செப்டெம்பர் முதல் வாரம்

ஜனாதிபதி தேர்தல் ஆட்சேபனை வழக்கு மீதான தீர்ப்பு செப்டெம்பர் முதல் வாரத்தில் வெளியிடப்படலாம் என நீதித்துறை வட்டாரங்கள் தெரிவித்தன.

இத் தீர்ப்பின் மூலம் இந்த வழக்கு நிராகரிக்கப்படலாம் புதிய தேர்தலுக்கு உத்தரவிடப்படலாம் அல்லது தற்போதைய ஜனாதிபதிக்கு பதிலாக மனுதாரரை ஜனாதிபதியாக பிரகடனப்படுத்தலாம் எனக் கூறப்படுகிறது.

இவற்றில் முதலாவது அல்லது இரண்டாவது ஒன்றே தீர்ப்பாக அமையுமென அரசியல் வட்டாரங்கள் கருதுகின்றன எனவும் தெரிகிறது.

# இராமர் ஆலயம் அமைத்தல் கட்டுமானப்பணி நிறுத்தம்

அயோத்தியில் இராமர் ஆலயம் அமைக்க அடிக்கல் நாட்டப்பட்ட சர்ச்சைக்குரிய இடத்தில் நடைபெற்று வந்த கட்டுமானப் பணிகள் இன்று நண்பகலுடன் நிறுத்தப்படும்.

கடந்த வியாழக்கிழமை இந்துமதசாதுக்கள்பிரதமர்நரசிம்மராவை சந்தித்து நடத்திய பேச்சுவார்த்தையைத் தொடர்ந்தே இந்த முடிவை அவர்கள் எடுத்துள்ளனர்.

எனினும் இன்னும் மூன்று மாதங்களுக்குள் இவ்விவகாரத்துக்கு சுமுகமான தீர்வு காணப்பட வேண்டுமென விஸ்வ இந்துபரிசத் உள்ளிட்ட இந்துமத சாதுக்கள் வலியுறுத்தியுள்ளனர்.

யாழ்ப்பாணத்திற்கு அனுப்பிவைப்பதற்காக தற்பொழுது கொழும்புத்துறைமுகத்தில் இரு கப்பல்களில் உணவுப் பொருள்கள் ஏற்றப்படுவதாக கொழும்புச் செய்தியொன்று தெரிவிக்கிறது.

மேலதிகப் பொருள்களை மற்றொரு கப்பலில் ஏற்றுவதற்கு நடவடிக்கையெடுக்கப்பட்டுள்ளதாகவும் அச் செய்தி தெரிவிக்கிறது.

# இம்மாத ஆசிரிய சம்பளம் கட்டு நிதி வரவில்லை

யாழ். மாவட்ட ஆசிரியர்களின் இம் மாதச் சம்பளம் யாழ்ப்பாணக் கல்வித்திணைக்களத்தாலும் கோட்டக்கல்வி அலுவலகத்தாலும் நேற்று வரை வழங்கப்படவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது.

யாழ் பிரதேசக்கல்விப்பணிப்பாளர் கொழும்பில் இருந்து வரும்போது கட்டு நிதியை எடுத்து வரக்கூடும் எனவும் அதன் பின்னரே ஆசிரியர் சம்பளம் வழங்கப்படலாம் எனவும் யாழ் கல்வித் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன. (12)

# இடம் பெயர்ந்தவர்களுக்கு ஜேர்மன் அரசு உதவி

இலங்கையில் இடம்பெயர்ந்துள்ள மக்களின் வசதிகளை ஏற்படுத்தவும், சுகாதார வசதிகளிக்கவும், தொழில் துறைகளில் பயிற்சிகளை வழங்கவும் இலங்கை அரசு ஜேர்மன் ஜனநாயக குடியரசிடமிருந்து 10 மில்லியன் டச்மார்க் பெறுமதியான உதவிகளைப் பெற உள்ளது.

இவ் உதவிகள் அரசசார்பற்ற நிறுவனங்களினூடாக இடம்பெயர்ந்த மக்களுக்குக் கிடைக்கவுள்ளதாகவும் யாழ்மாவட்ட அரசசார்பற்ற நிறுவனங்களின் இணையம் தெரிவித்துள்ளது.

யாழ் மாவட்டத்தில் இடம்பெயர்ந்துள்ள மக்களுக்கும் இவற்றைப் பெற்றுக்கொடுக்கும் நோக்குடன் யாழ் மாவட்ட அரசசார்பற்ற நிறுவனங்களின் இணையம் விபரங்களை திரட்டி வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது 15

ஒலிம்பிக் போட்டிக்கான உதைப்பந்தாட்ட பூர்வாங்க சுற்றுப் போட்டிகள் கடந்த வெள்ளிக்கிழமை ஆரம்பமாகின.

முதலாவது ஆட்டத்தில் இத்தாலி அமெரிக்காவை 2-1 என்ற கோல் கணக்கிலும் ஸ்பெயின் கொலம்பியாவை 4-0 என்ற கோல் கணக்கிலும் வென்றன.

மற்றப் பந்தயங்களில் போலந்து குவைத்தை 2-0 என்ற கணக்கிலும் கட்டார் எகிப்தை 1-0 என்ற கோல் கணக்கிலும் தோற்கடித்தன.

# நம்பிக்கை இல்லாப் பிரேரணை

மத்திய மாகாண சபைமீது நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டுவரப்படுவதற்கு முன்னறிவித்தல் பிரேரணை எதிர்க்கட்சியினரால் முன்வைக்கப்பட்டது.

எதிர்க்கட்சித் தலைவர் லால் விஜேநாயக்கா இப்பிரேரணையை கடந்த செவ்வாய்க்கிழமை சபையில் முன்மொழிந்தார்.

**வீணாகும் தண்ணீர் - நம் வாழ்நாளின் கண்ணீர்**

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

## ஏல விற்பனை

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் பாவனையில் இருந்த கீழ்வரும் பொருட்கள் எதிர்வரும் 92 07, 29 ஆம் திகதி காலை 10 மணி முதல் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக திருநெல்வேலி வளவில் பகிரங்க ஏலத்தில் விற்கப்படும்.

ஏலத்தில் வெற்றி பெறுவோர் பொருட்களுக்கான முழுப் பணத்தையும் பல்கலைக்கழக காசாளரிடம் செலுத்தி, அப்பொருட்கள் அனைத்தையும் 92 07. 29 ஆம் திகதி மாலை 4 00 மணிக்கு முன்னதாக பல்கலைக்கழக வளவில் இருந்து அப்புறப்படுத்தல் வேண்டும்.

ஏலத்தில் விற்கப்படும் பொருட்களை பார்வையிட விரும்புவோர் 92 07. 28 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை பி. ப. அலுவலக நேரத்தில் பல்கலைக்கழக நிதியாளரோடு தொடர்பு கொண்டு பார்வையிடலாம்.

ஏலத்தில் விற்கப்பட இருக்கும் பொருட்கள்

1. கூட்டல் இயந்திரம்
2. கதிரைகள் -
   அலுவலகம் - 03
   சாப்பாட்டு - 07
   உருக்கு - 01
3. கரம் உரஞ்சும் தட்டு - 01
4. கேத்தில் - அலுமினியம்
   சாதாரணம் - 05
   மின்சாரம் - 03
5. வாளி - 05
6. தொற்று நீக்கி - 01
7. செற்றி கதிரை -
   இருவர் இருப்பது - 01
   ஒருவர் இருப்பது - 02
8. பாத்திரங்கள் -
   பேசின் - 09
   பட்டர் டிஷ் - 02
   செம்பு எ/சி - 01
   பீங்கான் - 06
   ரம்ளர் - 05
   இட்டலி சட்டி - 01
   தோசை கரண்டி - 01
   இடியப்ப உரல் - 01
   தண்ணீர் பாத்திரம் - 02

18. அருவாள் - 01
19. ஆமைப்பூட்டு - 03
20. சதுரங்க போட்டும் காய்களும் - 01
21. பற்மின்ரன் நக்கற் - 08
22. பற்மின்ரன் செற் - 02
23. மேசைப்பந்து நக்கற் - 05
24. கால் பந்து - 01
25. ரியூப்லயிற் செற் - 01
26. மணிக்கூடு (மேசை) - 01 (சுவர்) - 2
27. குடம் - 01
28. வயலின் பெட்டி - 01
29. மண்வெட்டி - 01
30. ஆய்வுகூட உபகரணம் - 03
31. மேசை மின் விசிறிகள் - 02

### அர்ச். அன்னம்மாள் உற்சவம்

பாண்டியன்தாழ்வு அர்ச். அன்னம்மாள் ஆலய வருடாந்த திருநாள் இன்று காலை நடைபெறவுள்ளது.

காலை 6 30 மணிக்கு நடைபெறவுள்ள திருப்பலியைத் தொடர்ந்து திருச்சொரூப சுற்றுப்பிரகாரம் இடம்பெறும்.

இத் திருநாளை முன்னிட்டு இடம்பெற்ற நவநாள் வழிபாடுகளில் அருட் தந்தை ஜூலியன் பொன்னையா அடிகளார் மறை உரைகளை நிகழ்த்தினார். 16

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் இலங்கை

### சித்த மருத்துவப் பிரிவிற்கு 1991/92 ஆண்டிற்கான புதிய மாணவர்களை அனுமதித்தல்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் சித்தமருத்துவப் பிரிவிற்கு பி. எஸ், எம். எஸ் பட்டமளிப்பு படிப்பிற்கான மாணவர்களைச் சேர்ப்பதற்கு பின்வரும் தகைமைகள் உள்ள இலங்கைப் பிரஜைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

தகைமைகள்:-

(அ) 1988, 1989, 1990 ஆகிய கல்விப் பொதுத்தராதர உயர்தரப் பரீட்சைப் பெறுபேறுகளின் படி இரசாயனவியல், பௌதீகவியல், தாவரவியல், விலங்கியல் ஆகிய நான்கு பாடங்களில் ஒரே தடவையில் சித்தியடைந்திருக்க வேண்டும்.

(ஆ) 1991 ஆம் ஆண்டு ஆவணி 31ஆம் திகதியன்று 17 வயதிற்கு குறையாதவராக இருக்கவேண்டும்.

★ சிறில் ரணதுங்க பொலிஸாருக்கு எச்சரிக்கை

# மீண்டுமொரு கிளர்ச்சிக்கு ஜே. வி. பி. தயாராகிறது

தென் பகுதியில் மீண்டும் ஒரு கிளர்ச்சியில் ஈடுபட ஜே. வி. பி. இயக்கத்தினர் முயற்சி மேற்கொண்டு வருவதாகப் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் சிறில் ரணதுங்க எச்சரித்துள்ளார்.

நாட்டின் பல்வேறு பகுதிகளிலுமிருந்து கிடைத்து வரும் அறிக்கைகள் ஜே வி பி. இயக்கத்தினர் மீண்டும் தமது நடவடிக்கைகளை ஆரம்பித்து செயற்படுவதையே காட்டுவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

ஜே.வி.பியினரின் செயற்பாடுகளைத் தடுத்து கிளர்ச்சியை முறியடிக்க பொலிஸார் உடனடி நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமெனவும் சிறில் ரணதுங்க பொலிஸ் மா அதிபரைக் கேட்டுள்ளார்.

### 'போர்க் களம்' நாட்டுக் கூத்து

குருநகர் புனித யாகப்பர் ஆலயம் கட்டப்பட்டு 100 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு, குருநகரின் மறைந்த தலைசிறந்த நாட்டுக்கூத்து கலைஞர்கள் (அண்ணாவிமார்கள்) ஞானப்பிரகாசம், பக்கிரி சின்னத்துரை, நட்டுவன் அந்தோனிப்பிள்ளை, ஓட்டுக்கம்பனி சூசை இளையப்பா, சுவாம்பிள்ளை, துரைவீரன் ஆகியோரின் ஞாபகார்த்தமாக 'போர்க்களம்' என்ற புனித யாகப்பர் வரலாறு நாட்டுக்கூத்து நடத்தப்படவுள்ளது.

இந் நாட்டுக்கூத்து 28 ஆம் திகதி மாலை 6 30 மணிக்கு குருநகர் கலை அரங்கில், குருநகர் புனித யாகப்பர் கலைமன்றத்தினரால் மேடையேற்றப்படவுள்ளது. 16

### தபால் ஊழியர்க்கு சிரமம்

1993 ஆம் ஆண்டுக்கான க. பொ. த. பரீட்சையின் தனிப்பட்ட பரீட்சார்த்திகளின் முடிவுகள் நேற்று முன்தினம் தபால் மூலம் அறிவிக்கப்பட்டுள்ளன.

சில பரீட்சார்த்திகளின் முகவரிகள் தவறாக இருந்தமையால் தபால் ஊழியர்கள் பெரும் சிரமப்பட்டு பல இடங்களில் விசாரித்துத் திரிந்ததைக் காண முடிந்தது. (06

### பட்டமளித்து கௌரவம்

முப்பது வருடங்களுக்கு மேலாக நாதஸ்வரம் வாசித்து நாதஸ்வர உலகில் புகழ் பெற்றிருந்த திருமதி கோ. முத்துலட்சுமிக்கு நல்லூர் பலபதிர்காம தேவஸ்தானம் 'நாதஸ்வர கான ஜோதி'

### காசியின் 'தமிழன் கனவு' நூல் அறிமுக விழா நாளை

விடுதலைப்புலிகள் கலை, பண்பாட்டுக் கழகம் நடத்தும் 'சாகரம்' வெளியீடான உணர்ச்சிக் கவிஞர் காசி ஆனந்தனின் 'தமிழன் கனவு' கவிதை நூல் அறிமுக விழா யாழ். இந்துக் கல்லூரி மண்டபத்தில் நாளை திங்கட்கிழமை பி. ப. 2 30 மணிக்கு நடைபெறவுள்ளது.

திரு. லோகரட்ணம்-லோகி தலைமையில் நடைபெறவுள்ள இவ்விழாவில் இளங்குமரன் அறிமுகவுரை நிகழ்த்துவார்.

ஆய்வுரைகளைப் புதுவை இரத்தினதுரை, குழந்தை வேலு, பண்டிதர் பரந்தாமன் ஆகியோர் நிகழ்த்துவர்.

## வெளிநாட்டில் உயர்கல்விபயில பட்டதாரிகளுக்கு புலமைப்பரிசில்

பட்டதாரிகள் வெளிநாடுகளில் கல்வி கற்பதற்காக முதுமாணிப் பட்டப்பின்படிப்பு புலமைப்பரிசில்கள் வழங்கப்படவுள்ளன.

ஐக்கிய இராச்சியம், கனடா, ஹொங்ஹொங், அவுஸ்திரேலியா, நியூஸிலாந்து, நைஜீரியா உள்ளிட்ட எட்டு நாடுகளில் கல்வி கற்பதற்கு புலமைப்பரிசில்கள் வழங்கப்படவுள்ளன.

இந்த பொதுநலவமைப்பு பட்டப்பின் படிப்புக்கான விண்ணப்பங்கள் தற்பொழுது கல்வி உயர்கல்வி அமைச்சினால் ஏற்கப்பட்டு வருகின்றன.

இதேவேளை யப்பானில் பட்டப்பின் ஆராய்ச்சிப் படிப்பை மேற்கொள்வதற்கும் விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

அயோத்தி விவகாரம்

## இந்திய பாராளுமன்ற நடவடிக்கை மீண்டும் ஒத்திவைப்பு

அயோத்தியில் இராமர் ஆலயம் கட்டும் விஸ்வ இந்து பரிசத்தினரின் நடவடிக்கைகள் காரணமாக இந்திய பாராளுமன்றத்தின் இரு சபைகளும் வெள்ளிக்கிழமை சபை கூடிய சில நிமிடங்களிலேயே ஒத்திவைக்கப்பட்டன.

இந்த விவகாரம் தொடர்பாக லோக்சபையும், ராஜ்ய சபையும் வழமையான அலுவல்கள் எதையும் மேற்கொள்ளாமல் ஒத்திப் போடப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.

லோக்சபை சபாநாயகர் சிவராஜ் பாட்டீல் லோக்சபை நடத்த எடுத்த முயற்சிக்கு உறுப்பினர்கள் செவிசாய்க்கவில்லை.

ராஜ்ய சபையிலும் பாரதிய ஜனதா கட்சி தவிர்ந்த ஏனைய கட்சிகள் இப் பிரச்சினையை எழுப்பி சாதுக்களுடன் நடத்திய பேச்சுவார்த்தை விபரங்களை சபைக்கு தெரியப்படுத்த உடன் வரவேண்டுமென வலியுறுத்தினர்.

ராஜ்ய சபையின் துணைத் தலைவி நஜ்மா ஹெப்துல்லாவினால் இதற்கு ஏற்பாடு செய்ய முடியாததைத் தொடர்ந்து சபை நடவடிக்கைகள் தொடரமுடியாது

ரம்வர் - 05
இட்டலி சட்டி - 01
தோசை கரண்டி - 01
இடியப்ப உரல் - 01

தண்ணீர் பாத்திரம் - 02
தேனீர் கோப்பை - 09
தேனீர் பிரிகி - 01

9. ஆட்டுக்கல் - 01
10. மின்சார அடுப்பு - 02
11. பழைய புதினப் பத்திரிகைகள்
12. [illegible] அடிக்கும் இயந்திரம் - 04
13. சிகரட் சாம்பல் தட்டு - 01
14. துவிச்சக்கர வண்டி - 01
15. ஓட்டை போடும் இயந்திரம் - 12
16. அலுவலக மேசைத் தட்டு - 01
17. தட்டச்சு இயந்திரம் - 01

30. ஆய்வுகூட உபகரணம் - 03
31. மேசை மின் விசிறிகள் - 02
32. மேசைக் கண்ணாடி - 01
33. தண்ணீர் விடும் குழாய் - 50 அடி
34. மேசை - 02
35. போட்டோ பிரதி இயந்திரம் - 02
36. கை கழுவும் பேசின் - 01
37. மரப் பெட்டிகள்
38. மரச்சிலாகையால் ஆன பெட்டிகள்
39. மரப்பெட்டி பலகைகள்
40. உத்தியோகத்தர் சம்பளப் பதிவுகள்
41. அடிமட்டம் - 03
42. கழிவு ஒயில்

ஏல விற்பனை நடாத்தும் உத்தியோகத்தர்களின் முடிவே இறுதியானது.

பதிவாளர்

யாழ். பல்கலைக்கழகம்

07060

(ஆ) 1991 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 31ஆம் திகதியன்று 17 வயதிற்குக் குறையாதவராக இருக்கவேண்டும்.

31 - 08 - 1992-இல் மேற்குறிப்பிட்ட கல்வித் தகைமைகளை உடையவராக இருத்தல் வேண்டும். மேற்கூறப்பட்டவைக்கு அமையாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

அனுமதிப்பத்திர விபரங்களும், விண்ணப்பப் பத்திரமும் உதவிப் பதிவாளர் (தேர்வுகளும், அனுமதிகளும்) தேர்வுக்கிளை, அவர்களிடமிருந்து ரூபா 10 செலுத்தியோ, தபால் மூலமெனின் 23 × 10 செ.மீ. அளவுடைய தபால் மேலுறை ஒன்றை முத்திரையிட்டு அனுப்பி ரூபா 10க்கான காசுக் கட்டளையை, நிதியாளர், யாழ் பல்கலைக்கழகம் என்ற பெயருக்கு எழுதப்பட்டு அதனுடன் அனுப்புதல் மூலம் பெற்றுக்கொள்ளலாம்.

விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டிய கடைசித் திகதி 31 - 08 - 1992.

பதிவாளர்

07066

முப்பது வருடங்களுக்கு மேலாக நாதஸ்வரம் வாசித்து நாதஸ்வர உலகில் புகழ் பெற்றிருந்த திருமதி கே. முத்துலட்சுமிக்கு நல்லூர் [illegible] கதிர்காம தேவஸ்தானம் "நாதஸ்வர கான வித்தகி" என்ற பட்டத்தை வழங்கிக் கௌரவித்தது.
அத்துடன் பொன்னாடை போர்த்தித் தங்கப்பதக்கமும் பாராட்டுப் பத்திரமும் வழங்கப்பட்டது. 41

## திருநெல்வேலி அம்மன் உற்சவம்

திருநெல்வேலி ஸ்ரீ காயாரோஹண சுவாமி கோயில் ஸ்ரீ நீலாயதாக்ஷி அம்பிகை மஹோற்சவம் கடந்த வியாழன் ஆரம்பமானது.
எதிர்வரும் 31 ஆம் திகதி வெள்ளிக்கிழமை ரதோற்சவம் இடம்பெறும். 41

## துர்க்கையம்மன் உற்சவம் வழமைபோல

தெல்லிப்பழை துர்க்கை அம்மன் கோவிலில் வருடாந்த உற்சவம் இம்முறை வழமைபோல நடைபெறும் எனத் தெரிவிக்கப்படுகிறது.
உற்சவத்தைச் சிறப்பாக நடத்துவதற்குப் பல நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாகவும் மேலும் தெரிவிக்கப்பட்டது. 47

[illegible] அலுவல்கள் எதையும் மேற்கொள்ளாமல் ஒத்திப் போடப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.
லோக்சபை சபாநாயகர் சிவராஜ் பாட்டீல் லோக்சபை நிகழ்ச்சிகளை தொடர்ந்து ராஜ்ய சபையின் இணைத் தலைவர் நஜ்மா ஹெப்துல்லா [illegible] ஒழுங்கு ஏற்படுத்த முடியாததைத் தொடர்ந்து சபை நடவடிக்கைகள் தொடரமுடியாது ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

# தப்பிச் செல்ல முயன்ற அதிகாரியின் முயற்சி முறியடிப்பு

இலங்கையில் தேடப்பட்டு வரும் ஒரு அதிகாரி மேற்கு நாட்டொன்றுக்குத் தப்பிச் செல்ல எடுத்த மோசடி முயற்சியொன்றை கொழும்பில் இயங்கிவரும் அயல் நாட்டுத் தூதரகம் முறியடித்துள்ளதாக செய்தியொன்று தெரிவிக்கிறது.

இந்த அதிகாரி கிரிமினல் குற்றச்சாட்டின்பேரில் தேடப்பட்டு வந்தவர் என மட்டுமே தெரிவிக்கப்பட்டது. அவரின் பெயரோ அல்லது இந்த முயற்சியை முறியடித்ததாகக் கூறப்படும் தூதரகத்தின் பெயரோ வெளியிடப்படவில்லை.

# இந்தியாவின் புதிய ஜனாதிபதி நேற்று பதவியேற்றார்

இந்தியாவின் ஒன்பதாவது ஜனாதிபதியாக டாக்டர் சங்கர் தயாள் சர்மா நேற்றுக் காலை பதவியேற்றார்.

பாராளுமன்ற மத்திய மண்டபத்தில் பதவியேற்ற வைபவம் நடைபெற்றது.

இந்திய பிரதம நீதிபதி [illegible]லியா முன்னிலையில் டாக்டர் சங்கர் தயாள் சர்மா ஜனாதிபதியாக சத்தியப்பிரமாணம் செய்து கொண்டார்.

பதவியேற்பு வைபவம் நடைபெற்ற போது இந்திய இராணுவத்தினர் இருபத்தொரு பீரங்கிக் குண்டுகளை வெடிக்க வைத்தனர்.

அதன்பின்னர் முப்படையினரும் அணிவகுப்பு மரியாதை அளித்தனர்.

[illegible] 3 ஆம் திகதி புதன் கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின்றது.

8 ஆம் திகதி சனிக்கிழமை மஹாலக்ஷ்மிக்கு விஷேட அபிஷேக ஆராதனைகளுடன் வரலக்ஷ்மி நோன்பு அனுஷ்டிக்கப்படும்.

21 ஆம் திகதி வெள்ளிக்கிழமை இரதோற்சவமும் அடுத்தநாள் தீர்த்தோற்சவமும் நடைபெறும். 37

[illegible] இறுதியாட்டத்து நியமனம் பெற தகுதி பெற்றனர்.

ஆனால் 90 புள்ளிகள் பெற்று 60 ஆவது இடத்திலுள்ளவருக்கும் 78 புள்ளிகள் பெற்று 95 ஆவது இடத்தில் [illegible] அதிக புள்ளிகள் பெற்றுள்ள போதிலும் இந்நகரின் நியமனம் ஒரு முறைகேடானது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. 06

# அமெரிக்கா தயாராகிறது

அமெரிக்காவில் அடுத்த ஆண்டில் ஒரு லட்சத்து மூப்பத்தியிரண்டாயிரம் அகதிகள் குடிபுகுவதற்கு அனுமதியளிக்கப்படவுள்ளது.

கிழக்கு ஆசியா, முன்னாள் சோவியத் யூனியன் ஆகியவற்றைச் சேர்ந்த அகதிகளையே அமெரிக்காவுக்குள் அடுத்த வருடம் அனுமதிக்க ஜனாதிபதி புஷ் திட்டமிட்டுள்ளார்.

உலகிலுள்ள மொத்த அகதிகளின் எண்ணிக்கை சுமார் 160 இலட்சம் என மதிப்பிடப்பட்டுள்ளமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.

## இலங்கை அணியில் 11 வீரர்கள் இடம் பெறுகிறார்கள்

ஒலிம்பிக் போட்டியில் கலந்துகொள்ளவுள்ள இலங்கைக் குழுவில் 11 வீரர்கள் இடம்பெறுகிறார்கள்.

1948 ஆம் ஆண்டுக்குப் பின்னர் இம்முறையே இலங்கை கூடுதலான வீரர்களை ஒலிம்பிக் போட்டிகளுக்கு அனுப்பியுள்ளது.

இலங்கைக் குழு பங்குபற்றும் முதலாவது போட்டி இன்று நடைபெறும். இன்றைய பளுதூக்கும் போட்டியில் இலங்கை வீரர் ஒருவர் பங்குபற்றுவார்.

## பளை பரீட்சார்த்திகளுக்கு கொடிகாமத்தில் பரீட்சை!

ஆகஸ்ட் மாதம் முதலாம் திகதி ஆரம்பமாகவுள்ள க.பொ.த. உயர்தரப் பரீட்சைக்கான ஒரு தொகுதி வினாத்தாள்கள் நாளை திங்கட்கிழமை விமான மூலம் பலாலிக்கு எடுத்து வரப்படவுள்ளதாக நேற்று கொழும்பில் வெளியான செய்தியொன்று தெரிவிக்கிறது.

கிளிநொச்சி மாவட்டத்தில் பளை உதவி அரசாங்க அதிபர் பிரிவில் உள்ள பரீட்சார்த்திகளுக்கு யாழ். மாவட்டத்தினுள் அடங்கும் கொடிகாமம் திருநாவுக்கரசு மகா வித்தியாலயத்தில் இப்பரீட்சை நடத்தப்படவுள்ளதாகவும் பரீட்சைத் திணைக்களத்தினால் அறிவிக்கப்பட்டுள்ளது.

## 350 கோடி மக்கள் ரி. வி. யில் கண்டு களித்தனர்

ஸ்பெயினின் துறைமுக நகரமான பார்சிலோனாவில் 25 ஆவது ஒலிம்பிக் போட்டிகள் நேற்று மிகவும் கோலாகலமாக ஆரம்பித்து வைக்கப்பட்டன.

இப்போட்டிகளில் இம்முறை 10 ஆயிரத்துக்கும் மேற்பட்ட விளையாட்டு வீரர்கள் பங்குபற்றவுள்ளனர்.

விழாவின் ஆரம்ப நிகழ்ச்சியை 350 கோடிக்கும் அதிகமான மக்கள் நேற்றுத் தொலைக்காட்சியில் கண்டு களித்ததாக மதிப்பிடப்பட்டுள்ளது.

இந்த ஒலிம்பிக் போட்டியில் இம்முறை 172 நாடுகள் பங்குபற்றுகின்றன. 25 வகை விளையாட்டுக்களில் போட்டிகள் இடம்பெறும்.

ஒலிம்பிக் போட்டிகளில் வழங்கும் 257 தங்கப்பதக்கங்கள் உட்பட 1691 பதக்கங்களைப் பெறுவதற்கு ஒவ்வொரு நாட்டுப் போட்டியாளர்களும் முனைந்துள்ளனர். போட்டிகள் 15 நாள்கள் நடக்கும்.

## ஜனாதிபதி செயலக ஆலோசகர் குணசிங்கம் பதவி துறந்தார்

ஜனாதிபதி செயலகத்தின் பொருளாதார ஆலோசகராக இருந்த சி.குணசிங்கம் தனது பதவியைத் துறந்துள்ளார் என விடயமறிந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

இவரது பதவிக்காலம் முடிவடைந்துள்ளது எனவும் தெரிவிக்கப்பட்டது.

## ஈராக்கிற்கு இறுதி எச்சரிக்கை விடுப்பதற்கு நடவடிக்கை

ஈராக்கிற்கு எதிரான ஐ.நா.வின் தடைகளை அமுலாக்குவதற்கு அமெரிக்கா தேவையான அனைத்தையும் செய்யுமென அமெரிக்க வெளியுறவு அமைச்சர் ஜேம்ஸ் பேக்கர் சவூதி அரேபியாவில் கூறியுள்ளார்.

இதனிடையே யுத்த நிறுத்த ஒப்பந்தங்களுக்கு ஈராக் பணியாவிட்டால் நேச நாடுகள் இராணுவ நடவடிக்கையை மேற்கொள்ள நேரிடும் என அமெரிக்கா, பிரான்ஸ், பிரிட்டன் ஆகிய நாடுகள் இறுதி எச்சரிக்கை விடுக்கவுள்ளன.

## பயமுறுத்தலையடுத்து பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகள்

நேற்று ஆரம்பமான ஒலிம்பிக் போட்டிகளுக்கு முன்னரை விடப் பலத்த பாதுகாப்பு போடப்பட்டிருந்தது.

தீவிரவாத இயக்கமொன்றின் பயமுறுத்தலையடுத்தே பாதுகாப்பு அதிகரிக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

1980 ஆம் ஆண்டில் மொஸ்கோவில் இடம்பெற்ற ஒலிம்பிக் போட்டிகளில் பாலஸ்தீனக் கெரில்லாக்கள் சுட்டதில் 5 இஸ்ரேலிய வீரர்கள் கொல்லப்பட்டமை இங்கு குறிப்பிடத்தக்கது.

# ஒலிம்பிக் போட்டிகள் கோலாகலமாக ஆரம்பம்!

25 ஆவது ஒலிம்பிக் போட்டிகள் நேற்று ஸ்பெயினின் துறைமுக நகரான பார்சிலோனாவில் இலங்கை நேரப்படி நேற்றிரவு 11-30 மணிக்கு ஆரம்பமானது.

ஸ்பெயின் மன்னர் ஜோண் கார்லோஸ் அதிகாலை 2 மணிக்கு ஆரம்பித்து வைத்தார்.

ஆரம்ப நிகழ்ச்சி வெகு கோலாகலமாக பெருந்தொகையான செலவில் நடத்தப்பட்டது. போட்டியில் பங்குபற்றும் நாடுகளின் வீரர்கள் நாடுகளின் அகரவரிசைப்படி அணி அணியாக அணிவகுத்து வந்தனர்.

எஸ். வரிசையில் வரும் சோவியத் யூனியனின் செங்கொடியை இம்முறை காணவில்லை. ஜேர்மனிகள் இணைந்து ஒரே மூவர்ணக் கொடியின் கீழ் வந்துகொண்டிருந்தது.

ஆரம்ப நிகழ்ச்சியில் பல ஸ்பானிய கலாசார நிகழ்வுகளும் பார்வையாளர்களை பரவசப்படுத்தின.

முன்னதாக பாரம்பரிய முறைப்படி கிரேக்க நாட்டின் ஒலிம்பியா நகரில் ஏற்றப்பட்ட ஒலிம்பிக் தீபம் போட்டி நடைபெறும் பார்ஸிலோனா நகருக்கு வந்து சேர்ந்தபோது வீதியின் இரு மருங்கிலும் ஸ்பானிய மக்கள் நின்று கரகோஷம் செய்து அதனை வரவேற்றனர்.

அரங்கத்தில் நின்ற அனைத்து கப்பல்களும் ஒரே சமயம் தமது சைரன் ஒலிகளை எழுப்பியது குறிப்பிடத்தக்கதோர் அம்சமாக இருந்தது.

கிரீஸ் நாட்டில் இருந்து எடுத்துவரப்பட்ட ஒலிம்பிக் தீபம் அம்பு எய்து ஏற்றி வைக்கப்பட்டது சிறப்பு அம்சமாக இடம்பெற்றது.

## தமிழ் தொழிலாளருக்கு ஜனசக்தி புறக்கணிப்பு

கொத்மலை பிரதேசத்தில் தோட்டத் தொழிலாளருக்கு ஜனசக்தி வழங்கப்பட்டபோது தமிழர்கள் புறக்கணிக்கப்பட்டதாக கொத்மலை பிரதேச சபை கூட்டத்தில் பேசிய ஆளும் கட்சி உறுப்பினர் ஆர். மணிசேகரன் தெரிவித்தார்.

இதேபோல இப்பிரதேச காரியாலயத்துக்கு வரும் தமிழர்களும் மதிக்கப்படுவதில்லை எனவும் அவர் மேலும் சொன்னார். 06

## 200 பிரதேச செயலகங்கள் நாடுமுழுவதும் அமையும்

நாடு முழுவதும் இவ்வாண்டு இறுதிக்குள் இருநூறு பிரதேச செயலகங்கள் திறக்கப்படும் என ஜனாதிபதி பிரேமதாஸா தெரிவித்தார்.

அமைச்சுக்களின் செயலாளர்கள், மாகாணசபைகளின் செயலாளர்கள் பங்குகொண்ட கழக இணைவேந்தர்கள் மத்தியில் அவர் நேற்று உரையாற்றினார்.

வீண் விரயம், ஊழல் என்பனவற்றைஒழித்து மக்களுக்கு சிறந்த சேவையாற்றுவதே அரசின் பிரதான நோக்கமாகும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

## ஈராக்கின் அருகில் அமெரிக்கா படை குவிப்பு

ஈராக்கின் அருகே அமெரிக்கா இராணுவத்தை குவித்து வருவதாக ஏஜன்ஸி செய்திகள் தெரிவிக்கின்றன.

அமெரிக்காவின் நடவடிக்கைகளுக்கு பிரிட்டனும், பிரான்ஸும் ஆதரவு வழங்கியிருப்பதாக வெள்ளை மாளிகை அதிகாரி ஒருவர் தெரிவித்ததாகவும் அச்செய்திகள் மேலும் தெரிவித்தன.

## பஸ் சேவைகள் ஆரம்பம்

சித்தாண்டி ரயில் சம்பவத்தையடுத்து ஏற்பட்டபதற்றத்தினால் கடந்த நான்கு தினங்களாக நிறுத்திவைக்கப்பட்டிருந்த பஸ் சேவைகள் தற்பொழுது மீண்டும் பாதுகாப்புடன் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்படுகிறது.

மட்டு-பொத்துவில், மட்டு-வாழைச்சேனை, மட்டு-கொழும்பு, மட்டு-அம்பாறை பஸ் சேவைகளும் வழமைக்குத் திரும்பியுள்ளன.

வாழைச்சேனை, ஏறாவூர், ஓட்டமாவடி, காத்தான்குடி பகுதியில் நிலவிய பதற்றம் தணிந்து வருவதாகவும் அறிவிக்கப்படுகிறது.

## ★ வயலுக்கு சென்றபோது கைதான மகனை விடுவிக்க கோரி தாயார் மனு

1991 ஜனவரி 20 ஆம் திகதி வயலுக்கு சென்ற பிள்ளையை போடி கணேசமூர்த்தி என்பவரை வெகலர வெளி இராணுவத்தினர் கைது செய்து தடுத்து வைத்துள்ளதாகவும் அவரை விடுதலை செய்யுமாறும் கோரி அவரது தாயார் மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் மனுவொன்றை தாக்கல் செய்துள்ளார்.

வயலுக்கு சைக்கிளில்சென்ற தனது மகனிடமிருந்து படையினர் தங்க மோதிரம், இரண்டாயிரம் ரூபா ரொக்கப் பணம் ஆகியவற்றை எடுத்துவிட்டதாகவும் மனுவில் குறிப்பிட்டுள்ளார்.

கைதாகிய பத்து நாட்களில் அவரை விடுவிப்பதாக படையினர் அறிவித்திருந்தனர்.

ஆனால் தன்னிடமிருந்து எடுக்கப்பட்ட பொருள் பணம் என்பவற்றை திருப்பித் தருமாறு மகன் கேட்டதால் அவர் விடுவிக்கப்படவில்லை எனவும் மனுவில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. 06

## தென்னிந்திய திருச்சபை உதவியுடன் வசதி குறைந்தவர்களுக்கு தொழிற்பயிற்சி நிலையம்

தென்னிந்திய திருச்சபையினால் யாழ் பாணம் நாவலர் வீதியில் அமைக்கப்பட்டுள்ள தொழிற்பயிற்சி நிலையத்தை தென்னிந்திய திருச்சபையின் ஆயர்கலாநிதி டீ.ஜே. அம்பலவாணர் நேற்று திறந்துவைத்தார்.

இந்நிகழ்ச்சியில் கலாநிதி ஜெயகுலராஜா யாழ் மாநகர சபை முன்னாள் ஆணையாளர் திரு. சி. வி. கே. சிவஞானம் வைத்தியகலாநிதி நச்சினார்க்கினியன் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாக கலந்துகொண்டு உரையாற்றினார்கள்.

இப்பயிற்சி நிலையத்தில் வருகிற மாதம் 7 ஆம் திகதி தொடக்கம் தமிழ் தட்டெழுத்தும் சுருக்கெழுத்தும் ஆங்கில தட்டெழுத்தும் சுருக்கெழுத்தும் தையல் பயிற்சிகள் ஆகியவையும் இடம்பெறவுள்ளன.

இவ் வகுப்புகளில் பயில சுமார் 54 மாணவர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். இவர்கள் வசதி குறைந்த குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. 12

## பாடசாலைகளுக்கு காகிதாதிகள் நாளை வழங்கப்படவுள்ளன

சர்வதேச அபிவிருத்தி முகவராண்மைத் திட்டத்தின் கீழ் வரும் பாடசாலைகளுக்கான காகிதாதிகள் யாழ். கச்சேரி உறை (6×3) 500 ஆகிய காகிதாதிகளை எடுக்க வரும்போது பொருள் பதிவேட்டில் பதிவுடன் பாடசாலை முத்திரை

## விடுதலைப்புலிகள் கலை பண்பாட்டுக் கழகம் வேண்டுகோள்

அண்மையில் நடைபெறவிருக்கும் தமிழீழ தொழில் வளக் கண்காட்சியில் எமது கலை, பண்பாடு, இலக்கியங்களின் பழமையையும், தொடர்ப் பொலிவையும், சிறப்பையும் உள்ளடக்கிய தனிப் பகுதி ஒன்றை அமைத்து மக்கள் பார்வைக்கு வைக்க விடுதலைப் புலிகள் கலை பண்பாட்டுக் கழக நடுவப் பணியகம் கண்காட்சி அமைப்பாளர்களுக்கு ஒப்புதல் அளித்துள்ளது.

எனவே எமது காட்சியகத்தில் வைப்பதற்கான பழமை வாய்ந்ததும், பெறுமானம் உள்ளதுமானமரத்தில், உலோகத்தில், கல்லாலான சிற்பங்கள், விளக்குகள், விருதுகள், தாம்பாளங்கள், அரும் காட்சிப் பொருள்கள், ஏட்டுச் சுவடிகள், சான்றிதழ்கள், தேடக்கிடைத்தற்கரிய பிரசுரங்கள், புத்தகங்கள், பழமையான வாத்தியக் கருவிகள், ஓவியங்கள், நாணயங்கள், செப்பேடுகள், தமிழரின் பண்பாட்டுச் சின்னங்களைப் பிரதிபலிக்கும் வேறு பொருள்கள் முதலியவற்றை தமிழீழ மக்களிடமிருந்து எதிர்பார்க்கின்றோம்.

மக்களிடமிருந்து பெறப்படும் பொருள்கள் யாவும் இதை வுறாது காப்பாற்றி மீள ஒப்படைக்கப்படுவதில் மிகச் சிரத்தை எடுக்கப்படும் எனவே தமிழீழ மக்களிடமிருந்து பெரியளவை எதிர்பார்க்கப்படும் இந்தப் பொருள்களைக் கண்காட்சியில் வைப்பதற்காகவும் பலர் கண்டு களிக்க வாய்ப்பளிப்பதற்காகவும் விடுதலைப் புலிகள் கலை, பண்பாட்டுக் கழக நடுவப் பணியகத்திடம் மனமுவந்து ஒப்படைக்கும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

காலத்தின் தேவையான இந்தக் கண்காட்சியின் வெற்றிக்கு அனைத்து மக்களுடைய ஒத்துழைப்பையும் வேண்டி நிற்கின்றோம். பொருள்களை ஒப்படைப்போர் கோண்டாவிலுள்ள விடுதலைப் புலிகள் கலை, பண்பாட்டுக்கழக நடுவப் பணியகத்தில் ஒப்படைத்து அதற்கான உறுதிப்பத்திரத்தைப் பெற்றுக்கொள்ளவும்.

## ● தமிழக கடல் பகுதியில் புலிகளின் நடவடிக்கை முடிவுக்கு வந்துள்ளன

தமிழகத்தின் கடலோரப் பகுதிகளில் விடுதலைப் புலிகளின் நடவடிக்கைகள் கிட்டத்தட்ட முடிவுக்கு கொண்டு வரப்பட்டுள்ளதாக தமிழ் நாடு கடலோர காவல் படை தலைமை இயக்குனர் தெரிவித்துள்ளார்.

கடந்த இரண்டு வருடங்களில் தமிழக கடல் எல்லையில் அத்துமீறி வந்த வெளிநாட்டு மீன்பிடி படகுகளையும் கடலோர காவல் படையினர் கைப்பற்றியுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

## ஒலிம்பிக் போட்டியில் 5தமிழ் நாட்டு வீரர்கள்

நேற்று ஸ்பெயினில் ஆரம்பமான ஒலிம்பிக் விளையாட்டுப் போட்டியில் இந்தியாவிலிருந்து எண்பத்து நான்கு வீரர்கள் பங்கு கொள்கின்றனர்.

அதில் தமிழ் நாட்டைச் சேர்ந்த ஐவரும் அடங்குவார்கள். பிரபலடென்னிஸ்வீரர் ரமேஷ் கிருஷ்ணன், குத்துச்சண்டை வீரர் தேவராஜன் பாரம்தூக்கும் வீரர்கள் ரங்கசாமி ஆதிசேகர், டேபிள் டென்னிஸ் வீராங்கனை நியாதிஷா ஆகியோரே தமிழகத்தைச் சேர்ந்தவர்களாவர். 06

இசை மாலை

நீங்கள் ஆவலுடன் எதிர்பார்த்திருந்த

3 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்



மறைவு

அமெரிக்காவின் நடவடிக்கைகளுக்கு பிரிட்டனும், மேலும் தெரிவித்தன.

# இசை மாலை

நீங்கள் ஆவலுடன் எதிர்பார்த்திருந்த

## ★ இசைமாலை நிகழ்ச்சி ★

எதிர்வரும் யூலை 28 ஆம் திகதியிலிருந்து
ஆரம்பமாகிறது

இடம்: காசிப்பிள்ளை அரங்கு - அரியாலை யூலை 28 -
யாழ் பல்கலைக்கழகம் - யூலை - 29
சிவப்பிரகாச வித்தியாசாலை - சங்கானை -
யூலை 30

காலம்: மாலை 7 00 மணி

### நுழைவுச் சீட்டுக்கள்

| | | |
|---|---|---|
| ரூ | 1000 - 00 | குடும்பத்தினருக்குரியது |
| ரூ | 500 - 00 | குடும்பத்தினருக்குரியது |
| ரூ | 100 - 00 | இருவருக்குரியது |
| ரூ | 50 - 00, 25 00 | தனி ஒருவருக்குரியது |
| ரூ | 10 - 00, 5 00 | பாடசாலை மாணவருக்குரியது |

ஏனைய இடங்களுக்கான திகதி பினனர்
அறிவிக்கப்படும்

நிர்வாகத்தினர்
செஞ்சோலை

07064

## பாடசாலைகளுக்கு காகிதாதிகள் நாளை வழங்கப்படவுள்ளன

சர்வதேச அபிவிருத்தி முகவராண்மைத் திட்டத்தின் கீழ் வரும் பாடசாலைகளுக்கான காகிதாதிகள் யாழ். கல்வித் திணைக்களத்தினால் வழங்கப்படவுள்ளன.

இக் காகிதாதிகள் நாளை 27 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 9 மணியளவில் யாழ். கல்வித்திணைக்கள களஞ்சியப் பொறுப்பாளரால் வழங்கப்படவுள்ளன.

பிறிண்டட் மட்டை 52, தட்டச்சுக் கடுதாசி 01 கட்டு, கடித உறை (6×3) 500 ஆகிய காகிதாதிகளை எடுக்க வரும்போது பொருள் பதிவேட்டில் பதிவதுடன் பாடசாலை முத்திரை பொறிக்கப்பட்ட கையொப்பமிடப்பட்ட பொருள் பதிவுச் சான்றிதழின் இரண்டு பிரதிகள் சமர்ப்பிக்கப்படல் வேண்டுமென பிரதேச கல்விப் பணிமனைக் கணக்காளர் சுற்றறிக்கை ஒன்றின் மூலம் பாடசாலை அதிபர்களுக்கு அறிவித்துள்ளார். 18

## சென்னை திரும்பினார்

இந்திய ஜனாதிபதி பதவியை புதிய ஜனாதிபதி சங்கர் தயாள் சர்மாவிடம் ஒப்படைத்தபின் கடந்த ஐந்து வருட காலமாக ஜனாதிபதியாக விருந்த திரு. ஆர். வெங்கட்ராமன் சென்னைக்கு விசேட விமான மூலம் பயணமானார்.

விமான நிலையத்தில் புதிய ஜனாதிபதி சங்கர் தயாள் சர்மா பிரதமர் நரசிம்மராவ் மற்றும் பலர் விமான நிலையத்துக்கு திரு. வெங்கட்ராமனை வழியனுப்பிவைத்தனர் அவருடன் அவரது நலன்களைக் கவனிக்கவென செய்தி ஒலிபரப்புத்துறை அமைச்சர் அஜித் பாஞ்சாவும் கூட பயணம் செய்தார்.

நேற்று பிற்பகல் சென்னை மீனம்பாக்கம் விமான நிலையம் வந்தடைந்த திரு. வெங்கட்ராமனை மாநில ஆளுநர் முதல்வர் சபாநாயகர் மற்றும் அமைச்சர்கள் வரவேற்றனர் தென் சென்னையில் தமக்கு ஒதுக்கப்பட்ட மாளிகைக்கு அவரும் குடும்பத்தினரும் சென்றனர்.

முன்...

வித்துடன் ஒவ்வொரு மாதமும் பெறப்படும் விடுமுறைகள் தொடர்பாக மாதாந்த அறிக்கைகளை அனுப்பிவைக்குமாறு அவர் சகல திணைக்களத் தலைவர்களுக்கும் பணித்துள்ளார். 12

## 3 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

| தோற்றம் | | மறைவு |
|---|---|---|
| 08 | | 27 |
| — | | — |
| 06 |  | 07 |
| — | | — |
| 1946 | | 1989 |

### அமரர் பெனான்டோ சுவாம்பிள்ளை (நவம்)

(மிசுவிக்)

விளக்கேற்றி வைத்தீரே விளக்கணைந்து
நாளாச்சே
வீட்டில் உள்ளோர் கதறியழ விண்ணுலகம்
போனீரே

இவரின் ஆன்மசாந்திக்காக 27. 07 1992 அன்று யாழ்ப்பாணம் அடைக்கலமாதா ஆலயத்திலும், மிருசுவில் புனித நீக்கிலார் ஆலயத்திலும், மூளாய் ஆரோக்கியமாதா ஆலயத்திலும் பூசைப்பலி ஒப்புக் கொடுக்கப்படும்.

எஸ். ஸ்ரீசண்முகேஸ்வரி

07056

இப்பத்திரிகை முரசொலி பப்ளிஷர்ஸ் (பிறைவேற்) லிமிற்றெட் நிறுவனத்தினரால் டச்சு வீதி, கல்வியங்காடு, யாழ்ப்பாணம் ஐங்கவி கட்டிடத்தில் உள்ள அச்சகத்தில் 26-07-92 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது